**C.C.264/2025** Date:25.11.2025

Page No.

**அ.சா.6 முரளி த/பெ. கோவிந்தராஜ்** வயது.25

சாட்சி மனுவின் பேரில் ஆஜராகி எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-(எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை)</u>**

**எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். என்னிடம் காட்டப்படும் நான் போலீசாரிடம் அளித்த வாக்குமூலத்தில் அ.சா.1-ற்கு காயம் ஏற்பட்ட பின்னர் நான் அங்கு சென்று பார்த்ததாக கூறவில்லை என்றால் சரிதான், நீதிமன்றத்தில் தான் கூறியுள்ளேன். திருப்பதியின் வீடு எனது வீட்டிலிருந்து சுமார் 200 மீட்டர் தொலைவில் உள்ளது. மறுநாள் காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்தபோது நான் அங்கு தான் இருந்தேன். தருமன் எனது அண்ணன் ஆவார். காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. நான் சம்பவயிடத்திற்கு சென்று திருப்பதிக்கு காயம் ஏற்பட்டதை பார்த்தேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. நானும் சாட்சிகள் அனைவரும் ஒன்றாக தான் நீதிமன்றத்திற்கு வந்தோம். நான் கையொப்பம் செய்த தாளில் சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள நபர்களின் நிலங்களை குறித்து காவல்துறையினர் எழுதினார்கள். பக்கத்து நிலத்தை சார்ந்தவர்களை காவல்துறையினர் விசாரிக்கவில்லை. குமரவேல் என்பவர் தண்ணீர் முறையினை வேண்டாம் என்று சொன்னால் திருப்பதிக்கு தான் அதிகமாக வரும் என்றால் சரியல்ல. அதன் காரணமாக தான் திருப்பதி பொய் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. திருப்பதி இரண்டாம் எதிரியின் மனைவியை அசிங்கமாக பேசியதால் அதிலிருந்து தப்பிப்பதற்காக இந்த பொய் புகார் அளித்துள்ளார் என்றாலும் அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் நான் கையொப்பம் காவல் நிலையத்தில் வைத்து செய்தேன் என்றாலும் சரியல்ல.**

**<u>மறுவிசாரணை:- இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2025.11.25 19:41:36 +0530

Judicial Magistrate No.II,

Tirupathur.

**அ.சா.5 விஜயா க/பெ. சிவக்குமார்** வயது.29

சாட்சி மனுவின் பேரில் ஆஜராகி எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-(எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை)**

சம்பவத்தின் போது மதியம் நிலப்பிரச்சினை இருந்ததாக எனது அம்மா சம்பவத்திற்கு முன்பு எனக்கு தொலைபேசி மூலம் கூறினார். பிரச்சனையின் போது ஊர் பெரியவர்கள் தடுத்தார்களா என்றால் எனக்கு தெரியாது. நிலப்பிரச்சினை சம்பந்தமாக பஞ்சாயத்து பேசப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. எனது வீட்டிலிருந்து எனது அண்ணனின் வீடு 200 மீட்டர் தொலைவில் உள்ளது. எனது அண்ணன் இரண்டாம் எதிரியின் மனைவியிடம் தவறாக பேசிவிட்டு அதிலிருந்து தப்பிப்பதற்காக எனது அண்ணன் பொய் புகார் அளித்து அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2025.11.25 19:41:43 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.

**அ.சா.4 பரிமளா க/பெ. காளியப்பன்** வயது.45

சாட்சி மனுவின் பேரில் ஆஜராகி எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–(எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை)**

எனது வீட்டிலிருந்து திருப்பதியின் வீடு 200 மீட்டர் தொலைவில் உள்ளது. எனது வீட்டை விட மல்லிகாவின் வீடு திருப்பதியின் வீட்டிற்கு அருகிலேயே உள்ளது. தோராயமாக திருப்பதியில் வீட்டை சுற்றி 100 மீட்டர் தொலைவில் அவரது பங்காளிகளின் வீடு உள்ளது. சம்பவம் நடந்தது எனக்கு நேரடியாக தெரியாது கூச்சல் மட்டும் தான் கேட்டு சென்றேன். சம்பவம் நடக்கவில்லை என்றாலும் நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2025.11.25 19:41:51 +0530

Judicial Magistrate No.II,

Tirupathur.

**அ.சா.3 மல்லிகா க/பெ. திருப்பதி** வயது.26

சாட்சி மனுவின் பேரில் ஆஜராகி எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-(எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை)**

சிவகுமார் எனக்கு போன் மூலம் தகவல் தெரிவித்த பின்பு சம்பவ இடத்திற்கு நானும் காயத்ரி என்பவரும் வந்தோம். விஜயா என்பவர் நான் செல்வதற்கு முன்பே அங்கு இருந்தார். சம்பவத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே அவர்களுக்குள் நிலப்பிரச்சனை இருந்தது. நிலத்தை அளக்கும் போது திருப்பதிக்கு நிலம் சேர்ந்து வந்ததற்கு எதிரிகள் எதுவும் கூறாமல் சென்று விட்டார்கள். நான் முதல் விசாரணையில் ஆம்புலன்ஸ் மூலம் காயமுற்றவர்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2025.11.25 19:41:57 +0530

Judicial Magistrate No.II,

Tirupathur.

**அ.சா.2 குமுதா க/பெ. லிங்கண்ணன்** வயது.55
சாட்சி மனுவின் பேரில் ஆஜராகி எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-(எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை)</u>**

நான் எனது ஒரே மகனுடன் ஒரே வீட்டில் தான் உள்ளேன். எனது மகன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது நான் தான் 22 நாட்கள் உடன் இருந்தேன் என்றால் சரிதான், தற்போதும் எட்டு நாட்கள் உடனிருந்தேன். அவர் மருத்துவமனையில் இருந்த போது நான் அங்கு தான் இருந்தேன் என்றாலும் வீட்டிற்கு வரவில்லை என்றாலும் சரிதான். எனக்கு வெளிப்புற காயங்கள் ஏற்படவில்லை என்றால் சரிதான். சான்று பொருளாக குறியீடு செய்யப்பட்டுள்ள கத்திகள் பொதுவாக கிராமத்தில் அனைவரின் வீட்டிலும் இருக்கக்கூடியது என்றால் எனக்கு தெரியாது. காலையில் எனது மகனுக்கும் இரண்டாவது எதிரியின் மனைவிக்கும் வாய் தகராறு ஏற்பட்டபோது பக்கத்து நிலத்துக்காரரான மல்லிகா பார்த்தார். இருவரும் ஒருவரை ஒருவர் தகாத வார்த்தைகளால் திட்டிக் கொண்டிருந்தார்கள். (தற்போது சாட்சி இரண்டாம் எதிரியின் மனைவி தான் அசிங்கமாக பேசி அடிக்க வந்ததாக கூறுகிறார்.) எங்களுக்குள் நிலம் சம்பந்தமான பிரச்சனை இல்லை. நாங்களும் எதிரிகளும் தூரத்து உறவினர்கள் என்றால் சரிதான். எனது மகன் இரண்டாவது எதிரியின் மனைவியை அசிங்கமாக பேசியதால் அவர்கள் புகார் அளிப்பார்கள் என்ற காரணத்தினால் நடக்காத சம்பவத்திற்காக எதிரிகளுக்கு எதிராக புகார் அளிக்கப்பட்டு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வீட்டில் இருந்த கத்திகளை வைத்து தான் எதிரிகள் எனது மகனை தாக்கியதாக தவறாக எடுத்துக் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:- இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2025.11.25 19:42:07 +0530

Judicial Magistrate No.II,

Tirupathur.

**அ.சா.1 திருப்பதி த/பெ. லிங்கண்ணன்** வயது.37

சாட்சி மனுவின் பேரில் ஆஜராகி எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–(எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை)</u>**

பத்து வருடங்களாக நான் பேருந்து ஓட்டுனராக உள்ளேன். வீரபத்திரன் எனது தூரத்து உறவினர் ஆவார். எனது மனைவி என்னை விட்டு பிரிந்து சென்று பத்து ஆண்டுகள் ஆகிறது என்றால் சரிதான். நான் அவரை அடித்து துன்புறுத்தினேன் என்றால் சரியல்ல. எனது மனைவி நான் வேறொரு பெண்ணுடன் தவறான உறவில் உள்ளதால் விவாகரத்து வேண்டி வழக்கு தொடர்ந்து உள்ளார் என்றால் அவர் பொய் வழக்கு தொடர்ந்துள்ளார். பட்டியல் சாட்சிகள் 3 முதல் 7 வரையிலானவர்கள் என்னுடைய தூரத்து உறவினர்கள். இவர்களின் வீடு என்னுடைய வீட்டில் இருந்து 200 அடி தொலைவில் உள்ளது. பெருமாள் என்பவரின் வீடு எனது வீட்டிற்கு அருகில் உள்ளது. என்னுடைய வீட்டை சுற்றி 20 வீடுகள் உள்ளது. அவர்களை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை. மொத்தமாக 3 குடும்பங்கள் சேர்ந்து ஒரே கிணற்றில் நீர் பாய்ச்சி வந்தோம். எங்களுக்குள் சம்பவத்திற்கு முன் வழிப்பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். எதிரிகள் பயன்படுத்தி வந்த வழியை செல்ல வேண்டாம் என்று நான் தடுத்தேன் என்றால் சரிதான். 12 மணியளவில் 2ம் எதிரியின் மனைவி சிவகாமி எங்கள் நிலத்திற்கு சென்ற தண்ணீரை திருப்பினார். அவரிடம் ஏன் தண்ணீரை திருப்புகிறாய் என்று நானே கேட்டேன். அவரிடம் நான் அசிங்கமாக பேசி தவறான முறையில் நடந்து கொண்டேன் என்றால் சரியல்ல, அவர்கள் தான் என்னை அசிங்கமாக திட்டினார்கள். இந்த பிரச்சனையை எனது வீட்டை சுற்றி உள்ள 20 வீட்டைச் சார்ந்தவர்களும் பார்த்தார்கள். இந்த விவரத்தை காவல்துறையினரிடம் நான் கூறியுள்ளேன். நான் அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல. நான் ஓட்டுனர் என்பதால் வண்டியை FC செய்வதற்காக மெக்கானிக் ஷெட்டிற்கு எடுத்துச் செல்வேன் என்றால் சரிதான். எதிரிகள் என்னை தாக்கிய போது எனது வீட்டை சுற்றியுள்ள 20 வீட்டை சார்ந்தவர்கள் பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். வெளி நபர்கள் யாரும் அங்கு இல்லை. மருத்துவரிடம் எனது தங்கை எனக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து கூறினார். கூச்சல் சத்தம் கேட்டு விஜயா முதலியோர் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். எதிரிக்கு பிணை கிடைத்த பின்னர் உடனடியாக

நான் மருத்துவமனையில் இருந்து வீட்டுக்கு வந்து விட்டேன் என்றால் சரியல்ல. எதிரிகள் நிலத்துக்கு தண்ணீர் பாய்ச்சாதவாறு நான் தொடர்ந்து பிரச்சினை செய்து வந்தேன் என்றால் சரியல்ல. நான் மெக்கானிக் செட்டிற்கு செல்லும் போது தவறி விழுந்ததால் ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகளுக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளேன் என்றால் சரி அல்ல. 2–ம் எதிரியின் மனைவியிடம் நான் அசிங்கமாக பேசி தவறாக நடந்து கொண்டதால் என் மீது புகார் அளிப்பார்கள் என்பதினால் எதிரிகளுக்கு எதிராக நான் பொய்யான புகாரை அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால்தான் நான் இந்த வழக்கில் எனது உறவினர்களை தவிர தனிநபர்களை சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல அங்கு இருந்தவர்களை மட்டுமே சாட்சியாக சேர்த்துள்ளேன். எதிரிகள் மேஸ்திரி வேலை செய்கின்றனர். எதிரிகளுக்கு எதிராக பொய்யான புகாரை அளித்துள்ளேன் என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:– இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2025.11.25 19:42:17 +0530

Judicial Magistrate No.II,

Tirupathur.